A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 50 / 2024**

திரு M.ஜெயராமன்,
மாரியம்மன் கோயில் தெரு,
சுபா உப்பலவாடி–அஞ்சல்,
கடலூர் – 607 006.

………மேல்முறையீட்டாளர்
(திரு M. ஜெயராமன்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/ கடலூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.7–A, நெல்லிகுப்பம் மெயின் ரோடு,
கடலூர் – 607 001.

. . . எதிர்மனுதாரர்
(திரு K. அருளானந்தன், செயற்பொறியாளர்/ இ&ப/ கடலூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 27–06–2024**

**கேட்புரை நாள் : 22–08–2024**

**ஆணை நாள்: 06–09–2024**

27.06.2024 அன்று பெறப்பட்ட திரு M.ஜெயராமன், மாரியம்மன் கோயில் தெரு, சுபா உப்பலவாடி–அஞ்சல், கடலூர் – 607 006 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 50/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தன்னுடைய மின் இணைப்பு எண்.001–009–478–இல் தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தன்னுடைய மின் இணைப்பு எண்.001–009–478–இல் 11/2016 முதல் 05/2017 வரை உள்ள காலத்திற்கு தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட தொகையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 001–009–478–இல் மின் அளவி பழுதான காரணத்தால் தணிக்கை குழுவால் 11/2016 முதல் 05/2017 காலத்திற்கு சராசரி தொகை விதிக்கப்பட்டதால் அதனடிப்படையில் உதவி மின் பொறியாளர்/இ.ப/ மஞ்சக்குப்பம் அவர்களால் அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டு நுகர்வோருக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கடலூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 22.04.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின் பகிர்மான வட்டம் 28.05.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 கடலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.05.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

***<u>வழக்கெழு வினா–1:</u>***

*மனுதாரரின் மின் இணைப்பு எண் 001–009–478–III–B–க்கு 07/2016 மற்றும் 09/2016 வரையிலான காலத்திற்கு விதிக்கப்பட்ட சராசரி தணிக்கை தொகையினை ரத்து செய்து எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட இயலுமா?*

*மனுவில் குறிப்பிட்ட மனுதாரரின் மின் இணைப்பு எண் 001–009–478–III–B–ன் கணினி பேரேட்டை ஆய்வு செய்த போது 05.06.2017 அன்று மின்னளவி எரிந்துவிட்டதன் காரணமாக மாற்றப்பட்டுள்ளது. தணிக்கை பிரிவினரால் 11/2016 முதல் 05/2017 வரையிலான காலத்திற்கு சராசரி தொகை கணக்கிடப்பட்டு வசூலிக்க அறிவுறுத்தப்பட்ட நிலையில் மின் இணைப்பு எண் 001–009–478–III–B–ன் கணினி பேரேட்டை ஆய்வு செய்த போது 01/2017 மாதத்தில் மின் பயன்பாடு பதிவாகியுள்ளதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் தெரிவித்தது போல் மின் இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள மின் அளவி Static Electronic Meter with MD Reading Facility உள்ள மின் அளவி என்பதால் விட்டு விட்டு மின் பயன்பாடு பதிவாவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை கருத்தில் கொண்டு 01/2017 வரை மின்னளவி நல்ல நிலையில் இயக்கத்தில் இருந்ததாக எடுத்துக் கொண்டு தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட சராசரி குறைவு தொகையில் 03/2017 மற்றும் 05/2017 ற்கு மட்டும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்வழங்கல் விதிதொகுப்பு 11(5) ன் படி சராசரி கணக்கிட்டு, வரும் சராசரி குறைவு தொகையை மனுதாரரிடமிருந்து வசூல் செய்யுமாறு எதிர் மனுதாரர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு அளித்துவிட்டு மன்றத்திற்கு அறிக்கையாக அளிக்க அறிவுறுத்தப்படுகிறது.*

*<u>வழக்கெழு வினா–2</u>*

*வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழு வினா–1 மனுதாரருக்கு சாதகமாக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது. செலவுதொகை எதுவும் இல்லை."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு M. ஜெயராமன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு K. அருளானந்தன், செயற்பொறியாளர்/ இ&ப/ கடலூர், கடலூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண்.001–009–478ல் இறால் பண்ணை நடத்தி வருவதாகவும், தான் தன்னுடைய சர்வீஸ் மீட்டர் பொருத்தப்பட்ட நாளிலிருந்து 04.06.2016 வரை மீட்டர் நன்றாக தான் இயங்கி கொண்டிருந்ததாகவும், 05.06.2016 அன்று தான் மீட்டர் எரிந்துவிட்டதாகவும், இதனை அன்றே அலுவலகத்தில் தெரிவித்து அன்றே புதிய மீட்டருக்கான பணம் செலுத்தப்பட்டு, புதிய மீட்டர் 12.06.2016 அன்று வேறு மீட்டர் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 இந்த நிலையில் 26.06.2019 அன்று தணிக்கை குழுவால் மீட்டர் மாற்றப்பட்ட காலங்களுக்கு 11/2016 முதல் 05/2017 வரை சராசரி தொகை விடுப்பட்டுள்ளதாக 13,875 யூனிட்டிற்கு ரூ.93,521/– வீதம் மொத்தம் ரூ.3,74,084/– சராசரி விதிக்கப்பட்டதாகவும், ஏற்கனவே செலுத்திய தொகை ரூ. 1,42,322/– போக மீதமுள்ள ரூ.2.31,762/–ஐ 15 தினங்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும், கட்ட தவறினால் எதிர்வரும் மின் கட்டணத்துடன் வசூல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இதற்கு பதில் கடிதம் 19.08.2019 அன்று அலுவலகத்திற்கு நேரில் சென்று கொடுத்ததாகவும், அதில் இந்த மீட்டர் எரிந்ததற்கு தணிக்கை குழுவால் கண்டறியப்பட்ட சராசரி கட்டணத் தொகை கட்டச்சொல்லி கடந்த 16.06.2017 அன்று அதே காலமான 11/2016 முதல் 05/2017 வரை சராசரி கட்டணமாக ரூ.2,31,898/– 30 தினங்களுக்கு கட்ட வேண்டும் என்றும், அப்படி கட்டத்தவறினால் முன்னறிவிப்பு ஏதுமின்றி அடுத்த

மாத மின் கட்டணத்தில் சேர்த்து வசூலிக்கப்படும் என்று அந்த கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், இதற்கு 25.06.2017 அன்று தன்னுடைய விளக்க கடிதம் அளித்து இந்த தணிக்கை தொகையை ரத்து செய்யும்படி கடிதத்தின் வாயிலாக பதில் அளித்திருந்ததாகவும், பிறகு அலுவலகத்திற்கு சென்று கேட்டதற்கு ரத்தாகிவிட்டது என்று கூறிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே, இந்த நிலையில் 02.11.2023 அன்று 7.00 மணிக்கு தனது செல்போனுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்ததாகவும், அதில் 002-001-009-478 என்ற தன்னுடைய இறால் பண்ணை சர்வீசுக்கு ரூ.2,31,762/- பணம் கட்ட வேண்டும் என்று செய்தி வந்திருந்ததாகவும், அதை பார்த்ததும் மனம் அதிர்ந்து போய் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும், எனவே, இதுபற்றி அலுவலகத்திற்கு சென்று கேட்டபோது, இதை தாங்கள் அனுப்பவில்லை என்றும் தங்கள் மேல் அலுவலகத்திலிருந்து வந்தது என்று கூறியதாகவும், எனவே, ஐயா அவர்கள் இதனை ஆவன செய்து ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 பின்னர் அந்த குறுஞ்செய்தி ரத்தாகிவிட்டதாகவும், இப்படி நிம்மதியாக இருக்கும்பொழுது கடந்த 19.03.2024 அன்று உதவி மின் பொறியாளர் (கிராமம்) மஞ்சக்குப்பம் அலுவலகத்திலிருந்து தனக்கு (009-478) சர்வீஸ் அதே காலமான 04/2016 முதல் 03/2017ம் மாதத்திற்கான சராசரி மின் கட்டண தொகையை ரூ.2,31,762/-ஐ 30 தினங்களுக்குள் கட்ட வேண்டும் என்று தபால் வந்ததாகவும், இந்த நிலையில் 26.03.2024 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் மனு அளித்ததாகவும், கடலூர் மின் நுகர்வோர் புகார் எண்.32 நாள் 22.04.2024 அன்று விசாரணை நடைபெற்று பின்பு இந்த மன்றத்தின் தீர்ப்பானது தனக்கு 03.06.2024 அன்று பதிவு அஞ்சல் மூலம் தனக்கு கிடைத்ததாகவும், இந்த தீர்ப்பில் 03/2017 மற்றும் 05/2017 மாதத்திற்காக கட்டணத்தை செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் 03/2017 மாதம் தான் இறால் வளர்ப்பு செய்யாத காலம் என்பதால் அவர் மின்சாரம் பயன்படுத்தப்படவில்லை என்றும், 05/2017ம் மாதம் இறால் வளர்ப்பு ஆரம்பகாலம் என்பதால் இதில் தான் பயன்படுத்திய மின்சாரத்திற்கான தொகையை செலுத்திவிட்டதாகவும், எனவே, இந்த தொகையையும் ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 001-009-478 இறால் பண்ணை நடத்த வழங்கப்பட்ட வீதப்பட்டி III-B என்றும், முறையீட்டாளர் கூறியது நுகர்வோர் பேரேட்டின்படி சரி ஆகும் என்றும் தணிக்கை குழுவால் 11/2016 முதல் 05/2017 காலத்திற்கு மின் அளவி பழுது என சராசரி தொகை விடுப்பட்டுள்ளதால் 13785 Units க்கு 3,74,084/- விதிக்கப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே செலுத்திய தொகை ரூ.1,42,322/- போக மீதம் ரூ.2,31,762/- வசூலிக்கப்பட வேண்டும் என தணிக்கை சீட்டு எண் 43 போடப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் உதவி மின் பொறியாளர்/இ.ப/ மஞ்சக்குப்பம் அவர்களால் அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டவுடன் Slip ஏற்றப்பட்டதாகவும், அதையொட்டி நுகர்வோருக்கு குறுஞ்செய்தி சென்று உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் நுகர்வோர் புகார் எண் 32/22.04.2024 கடலூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்ததால் தற்காலிகமாக பதிவேற்றம் செய்யப்பட்ட Slip ரத்து செய்யப்பட்டதாகவும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 03/2017 மற்றும் 05/2017 மாதத்திற்கு மின் வழங்கல் விதி 11 (5) ன் படி சராசரி கணக்கீட்டு வரும் சராசரி குறைவு தொகையை மனுதாரரிடமிருந்து வசூல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டதாகவும், அதனடிப்படையில் மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்றும், இந்நிலையில் 03/2017 மாதத்தில் 5990 Units க்கும் FC உட்பட ரூ. 41,613/- க்கும் 05/2017 மாதம் 100 Units க்கும் FC உட்பட மொத்தம் ரூ.2421/-ம் செலுத்தி உள்ளதாகவும், இவை அன்றி விடுபட்ட சராசரி Units 03/2017 மற்றும் 05/2017 க்கு ரூ.1,43,008/- வருவதில் நான்கில் ஒரு பங்கு தொகை ரூ.35,769/- தொகையை 26/06/2024 அன்று வசூல் செய்யப்பட்டுவிட்டதாகவும், மீதம் உள்ள ரூ 1,07,239 /- தொகையை இரத்து செய்ய வேண்டி மேல்முறையீட்டாளர் மின் குறைத்தீர்ப்பாளரை அணுகியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண்.001–009–478–இல் இறால் பண்ணை நடத்தி வருவதாகவும், தன்னுடைய சர்வீஸ் மீட்டர் பொருத்தப்பட்ட நாளிலிருந்து 04.06.2016 வரை மீட்டர் நன்றாக தான் இயங்கி கொண்டிருந்ததாகவும், 05.06.2016 அன்று தான் மீட்டர் எரிந்துவிட்டதாகவும், இதனை அன்றே அலுவலகத்தில் தெரிவித்து அன்றே புதிய மீட்டருக்கான பணம் செலுத்தப்பட்டு, வேறு புதிய மீட்டர் 12.06.2016 அன்று பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 இந்த நிலையில் தணிக்கை குழுவால் மீட்டர் மாற்றப்பட்ட காலங்களுக்கு 11/2016 முதல் 05/2017 வரை சராசரி தொகை விடுப்பட்டுள்ளதாக ரூ.3,74,084/– சராசரி விதிக்கப்பட்டதாகவும், ஏற்கனவே செலுத்திய தொகை ரூ. 1,42,322/– போக மீதமுள்ள ரூ.2,31,762/–ஐ செலுத்த வேண்டும் எனவும், செலுத்த தவறினால் எதிர்வரும் மின் கட்டணத்துடன் வசூல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 இந்த நிலையில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் மனு அளித்ததாகவும், விசாரணை நடைபெற்று மன்றத்தின் தீர்ப்பு கிடைத்ததாகவும், அந்த தீர்ப்பில் 03/2017 மற்றும் 05/2017 மாதத்திற்கான கட்டணத்தை செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் 03/2017 மாதம் தான் இறால் வளர்ப்பு செய்யாத காலம் என்பதால் அவர் மின்சாரம் பயன்படுத்தப்படவில்லை என்றும், 05/2017 ஆம் மாதம் இறால் வளர்ப்பு ஆரம்பகாலம் என்பதால் இதில் தான் பயன்படுத்திய மின்சாரத்திற்கான தொகையை செலுத்திவிட்டதாகவும், எனவே, இந்த தொகையையும் ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 001–009–478 இறால் பண்ணை நடத்த வீதப்பட்டி III–B–இல் வழங்கப்பட்டதாகவும், தணிக்கை குழுவால் 11/2016 முதல் 05/2017 காலத்திற்கு மின் அளவி பழுது என சராசரி தொகையாக ஏற்கனவே செலுத்திய தொகை ரூ.1,42,322/– போக மீதம் ரூ.2,31,762/– வசூலிக்கப்பட வேண்டும் என தணிக்கை சீட்டு போடப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் உதவி மின் பொறியாளர்/இ.ப/ மஞ்சக்குப்பம் அவர்களால் அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்ததால் தற்காலிகமாக பதிவேற்றம் செய்யப்பட்ட Slip ரத்து செய்யப்பட்டதாகவும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 03/2017 மற்றும் 05/2017 மாதத்திற்கு மின் வழங்கல் விதி 11 (5) ன் படி சராசரி கணக்கீட்டு வரும் சராசரி குறைவு தொகையை மனுதாரரிடமிருந்து வசூல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டதாகவும், அதனடிப்படையில் சராசரி கணக்கீடு செய்யப்பட்டு 03/2017 மற்றும் 05/2017 க்கு ரூ.1,43,008/– வருவதில் நான்கில் ஒரு பங்கு தொகை ரூ.35,769/– தொகையை வசூல் செய்து மீதம் உள்ள ரூ 1,07,239 /– தொகையை செலுத்த வேண்டுமென்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கூறிய வாத பிரதிவாதகளின் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனுவில் மேல்முறையீட்டாளருக்கு தணிக்கை குழுவினரால் கணக்கீடு செய்யப்பட்டு வழங்கிய துண்டறிக்கையை ஏற்கனவே நுகர்வோர் குறைதீர்மன்றம் மின்னளவி பழுதான காலம் என கருதப்பட்ட 11/2016 முதல் 05/2017–க்குறிய தொகையான ரூ.2,31,792/–ஐ மாற்றி மறு கணக்கீடு செய்து 03/2017 மற்றும் 05/2017 என மாற்றியதன் அடிப்படையில் எதிர்மனுமாரர் திருத்தி அமைக்கப்பட்ட தொகையான ரூ. 1,43,008/– செலுத்த தெரிவித்த நிலையில் மேல்முறையீட்டாளர் அத்தொகையை தள்ளுபடி செய்ய முறையிட்டுள்ளார்.

7.8 இந்நிலையில் நுகர்வோர் பேரேட்டை ஆய்வு செய்ததில் 03/2017 கணக்கீட்டு காலத்தில் உபயோகத்தில் இல்லை எனவும், 03.05.2017 அன்று 05/2017–ற்கான கணக்கீடு செய்யும்போது மின்னளவியின் நிலை 'Normal' என்று பதிவிடப்பட்டுள்ளது. அதன்பிறகு 05.06.2017 அன்று 06/2017 மாத கணக்கீட்டின்போதுதான் மின்னளவி எரிந்துள்ளது தெரியவந்துள்ளது. எனவே, 03.05.2017 அன்று கணக்கீடு செய்தபின்தான் மின்னளவி பழுதாகியுள்ளதாக அறியமுடிகிறது. எனவே, 03.05.2017 முதல் மின்னளவி மாற்றப்பட்ட 05.06.2017 வரைதான் மேற்கண்ட மின்னிணைப்பின் மின்னளவி பழுதான காலமாக முடிவுசெய்யப்படுகிறது. நுகர்வோர் குறைதீர்மன்ற ஆணையில் 03/2017 மற்றும் 05/2017–க்கு உரிய காலத்திற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 11(5)–இன்படி சராசரி கணக்கிட்டு வசூலிக்க தெரிவித்த நிலையில் 03.05.2017–லிருந்து 05.06.2017 வரைக்கான காலம் தான் மின்னளவி பழுது என்பதால் அக்காலத்திற்குண்டான சராசரி கட்டணத்தை மட்டும்

வசூலிக்க தீர்வு செய்யப்படுகிறது. எனவே, ஏற்கனவே வசூலித்த தொகையான 25% கழித்து மீதமுள்ள தொகையை தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி 12 –இன்படி நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மின்குறைதீர்மன்றத்தின் ஆணையில் மாற்றம் செய்து உரிய நடவடிக்கை எடுக்கமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 50/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு M.ஜெயராமன்,
மாரியம்மன் கோயில் தெரு,
சுபா உப்பலவாடி–அஞ்சல்,
கடலூர் – 607 006.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ கடலூர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.7–A, நெல்லிகுப்பம் மெயின் ரோடு,
கடலூர் – 607 001.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.